**குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1, பத்மனாபபுரம்**

**முன்னிலை –ப. பிரவீன் ஜீவா, பி.ஏ, பி.எல், குற்றவியல் நடுவர் எண்.1 பத்மனாபபுரம்**

**19.03.2025**
**DVC NO: 6/2025**
**உத்தரவு.**

மனுதாரர் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பெண்களுக்கு எதிரான குடும்ப – வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டப்பிரிவு 12–ன் கீழ் நடவடிக்கை எடுக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்**

இந்த மனுவில் 1.ம் எதிர்மனுதாரர் தனது கணவர் என்றும், 2–வது எதிர்மனுதாரர் தன்னுடைய மாமியார் என்றும், 3.ம் எதிர்மனுதாரர் தன்னுடைய மாமனார் என்றும், 4.–வது எதிர்மனுதாரர் கணவரின் சகோதரர் என்றும் அவர்களுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் 2019.ல் திருமணமாகி அதை 03.03.2021 அன்று பதிவு செய்யப்பட்டது என்றும், 31.12.2017.ல் நிச்சயதார்த்தம் முடித்து 1.ம் எதிர்மனுதாரர் UAE.க்கு சென்றுவிட்டு 1 வருடம் கழித்து வந்து பின்னர் திருமணம் செய்து கொண்டார் என்றும், 2021 ஊருக்கு வந்து 40 நாட்கள் இருந்தபோது பலமுறை மதுபோதையில் வந்து 1.ம் எதிரி சண்டை போட்டார் என்றும், தனக்கு ஒரு புது உடை வாங்கி கேட்டபோது கெட்ட வார்த்தைகளால் அசிங்கப்படுத்தியதாகவும் உண்பதற்கோ, உடுப்பதற்கோ, மருந்திற்கோ எந்தவொரு பணமும் செலவு செய்யவில்லை என்றும், ஒவ்வொரு தேவைகளையும் மனுதாரரின் பெற்றோரே செய்து வந்ததாகவும் தனக்கு திருமணத்தின்போது 65 சவரன் தங்க நகைகள் வழங்கப்பட்டதில் 1.ம் எதிர்மனுதாரர் UAE திரும்புவதற்கு 2 நாட்களுக்கு முன் மனுதாரரின் 35 பவுன் நகைகளை எடுத்து கடனை முடிப்பதற்காகவும் எதிரிகள் சேர்ந்து தன்னுடைய 11 பவுன் நகைகளை எடுத்து விற்பனை செய்ததாகவும் தனக்கு குழந்தை இல்லை என்று குறை சொன்னதால் தக்கலையில் ஒரு மருத்துவமனையில் சென்று பரிசோதனை செய்தபோது எந்த குறையும் இல்லை என்று தெரிந்தது.

2.ம் எதிரியுடன் சேர்ந்து 1.ம் எதிரியின் தகப்பனாரும் குழந்தை பிறக்காததற்கு தொடர்ந்து மனுதாரரை குறை கூறிக்கொண்டிருந்ததால் குலசேகரத்திலுள்ள ராதாகிருஷ்ணன் மருத்துவமனையில் பரிசோதனைக்கு சென்றபோது 1.ம் எதிரியின் குறைபாட்டினால்தான் மனுதாரர் கருவுறவில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டது என்றும், அதை திருவனந்தபுரத்திலுள்ள ஆற்றுகால் தேவி மருத்துவமனையில் உறுதி செய்யப்பட்டது என்றும் சிகிச்சையும் எந்த பலனும் அளிக்கவில்லை மேல் சிகிட்சை மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டுமென்றால் நல்ல உணவும் நிம்மதியான ஓய்வும் தனக்கு வழங்கப்பட வேண்டும் என்று

மருத்துவர் அறிவுறுத்தினார் என்றும், ஆனால் இரண்டாம் எதிரி வேண்டுமென்றே பல ரீதியிலும் புண்படுத்துவதை தொடர்ந்தாலும் முடிந்தவரையில் பொறுத்துக் கொண்டதாகவும் 17.03.2024 அன்று 2.ம் எதிரி மனுதாரரை கீழ்த்தரமாக ஏளனம் செய்தது பற்றி 1.ம் எதிரியிடம் கூறியபோது 1.ம் எதிரி மிருகத்தனமாக அடித்து கொடுமைப் படுத்தியதாகவும் சில உறவினர்களின் ஈடுபாட்டால் மனுதாரர் 19.03.2024.ம் தேதி தாய் தகப்பனார் வீட்டிற்கு சென்றதாகவும் ஓரிரு முறை அங்கு வந்த 1.ம் எதிரி தன்னையும் தன் தகப்பனாரையும் வரதட்சணை குறைந்துவிட்டது என்று திட்டிக்கொண்டு சென்றார் என்றும்,

எனவே மனுதாரர் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் பாதுகாப்பு உத்தரவும் தடை உத்தரவும் ஜீவனாம்ச பரிகாரமும் நகை மற்றும் பொருட்களை திரும்ப ஒப்படைக்க கோரியும் நஷ்டஈடாக 25 லட்சம் கொடுக்க கோரியும் பிரிவு 12.ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரரை கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியது மனுதாரரின் மனுவின் மூலம் அறிய முடிகிறது.

மனுதாரர் குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க கோரி 1 முதல் 4 எதிர்மனுதார்கள் மீது மனுதாக்கல் செய்துள்ளார். ஆனால் 4 ம் எதிர்மனுதாரர் மீது குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு உண்டான எந்த முகாந்திரமும் மனுவில் காணப்படவில்லை. 4 ம் எதிர்மனுதாரர் மனுதாரரை வரதட்சணை கொடுமை அல்லது வேறு ஏதாவது குற்றச்செயலில் ஈடுபட்டிருந்தால் அதுகுறித்து உரிய முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள மனுதாரருக்கு தடை எதுவும் கிடையாது. குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் பரிகாரம் கோரி 4ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தாக்கல் செய்துள்ளது சந்தேகத்தை ஏற்படுத்துவதாலும், மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது 4 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொள்வதற்கு எந்தவித முகாந்திரம் எதுவும் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

எனவே மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டப்பிரிவு 12 ன் கீழ் மனுவை கோப்பிற்கு எடுத்து 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்ப இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

**மீண்டும் அழைக்க. 23.04.2025**

ஒம்/– ப. பிரவீன் ஜீவா
குற்றவியல் நடுவர் எண்.1
பத்மனாபபுரம்.

// உண்மை நகல்//